Registered as a News Paper பக்கங்கள்: 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 06 (22-08-1991) வியாழக்கிழமை ஓசை: 186

## அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டதாக அறிவிப்பு

(நல்லூர்)

அதிபர்கள் தரங்களுக்கான அனைத்து வெற்றிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. நாட்டு நிலைமை காரணமாக வட-கிழக்கு மாகாணங்களிலிருந்து நேர்முகத் தெரிவுக்குத் தோற்றாதவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். 1989 மே மாதத்தில் அதிபர்கள் தரத்துக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைகள் நடாத்தப்பட்டு பெறுபேறுகளின் அடிப் (4ஆம்பக்கம் பார்க்க)

# சோவியத்தில் சதிப்புரட்சி தோல்வி:

# 'கொர்பி' மொஸ்கோ திரும்புகிறார்

(மொஸ்கோ)

சோவியத் யூனியனில் சதிப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய எட்டுப்பேர் அடங்கிய குழு மொஸ்கோவை விட்டு வெளியேறிவிட்டதாகவும், அவர்களால் அமைக்கப்பட்ட ஆட்சிக் குழு கலைக்கப்பட்டு விட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

**அதேவேளை பிந்திக்கிடைத்த பி.பி.ஸி. செய்திகளின் படி கிரிமியாவில் இருந்து மொஸ்கோ புறப்பட்டுவிட்ட கொர்பசேவ் 24 மணிநேரத்திற்குள் ஜனாதிபதியாக பொறுப்பேற்பார்.**

சோவியத் யூனியனில் புரட்சிச் சதியில் ஈடுபட்ட வெனடி யானோவ்வும் கே.ஜி.பி உளவுப் படையின் தலைவர் கிரியோக்கோவ் உட்பட ஏனைய ஆறு பேரும் மொஸ்கோவை விட்டு வெளியேறி விட்டனர்.

இவர்கள் எட்டுப் பேரும் வெளியேறியதை ரஷ்ய தலைவர் பொறிஸ்யெல்சின் தமது நாடாளுமன்றஉரையில் குறிப்பிட்டார். அதேவேளை உலுகோபா என்ற விமானநிலையத்திற்கு இவர்கள் சென்று கொண்டிருக்கின்றனர் என்று அவர் தமது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்க செய்திஸ்தாபனமான சி.என்.என். தனது செய்திப்படி யானொவும், கிரியோக்கோவும் ஏற்கனவே உலுகோபா விமானத்தளத்திலிருந்துவெளியேறிவிட்டதாக அந்த விமான தளத்தின் பாதுகாப்பிற்குப் பொறுப்பானவர் குறிப்பிட்டதாக கூறியது.

### படைகள் அகன்றன

இந்த புரட்சிக்குழு வெளியேறியதைத் தொடர்ந்து மொஸ்கோவின் கிரெம்ளினின் (4ஆம் பக்கம் பார்க்க)

## கே.ஜி.பி. நிலை குறித்து குழப்பமான தகவல்

(மொஸ்கோ)

கடந்ததிங்கட்கிழமைநடந்த சதிப்புரட்சியில் கே.ஜி.பியின் நிலை தொடர்பாக வெளியாகும் செய்திகள் குழப்பம் மிக்கவையாகவுள்ளன.

கே ஜி. பி. தலைவர் பிளாடி ...

பொழுது வரும் செய்திகள் முரண்பட்டவையாகவுள்ளன. அதேவேளை கொர்பசேவ் ஆட்சிக் கவிழ்ப்புத் தொடர்பாக சோவியத் உளவு ஸ்தாபனமான கே. ஜி. பி. க்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளதாக ...

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம்

## விபுலானந்த அடிகளுக்கு விழா எடுக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள் அவர்களின் நூற்றாண்டை ஒட்டி விழா எடுப்பதற்கு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் தீர்மானித்துள்ளது. முத்தமிழையும் தனித் தனியாக ஆராய்ந்து அதன் பெருமைகளையும், சிறப்புக்களையும் உலகுக்கு எடுத்தியம்பிய வி, (4ஆம் பக்கம் பார்க்க)

## விதவைகளுக்கான ஓய்வூதிய படிவங்கள் செயலகத்தில் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

விதவைகளுக்கான ஓய்வூதியத்தைப் பெறுவதற்குரிய படிவங்களை இனிமேல் யாழ். செயலகத்திலேயே பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. ( ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### டிலக்ஸ்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் நடந்த 07-08-91 அன்று நடைபெற்ற மோதலில் காயமடைந்து வைத்திய சிகிச்சை பெற்று வந்த டிலக்ஸ் (தி. ராஜேந்திரன், புதுமுறிப்பு, உருத்திரபுரம்) நேற்று முன் தினம் காலை வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைச் செலுத்தியுள்ளனர்.

## 17 புளொட் விடுதலை

(மாலே)

சதிப்புரட்சியில் சம்பந்தப்பட்டு மாலைதீவில் சிறை வைக்கப்பட்டிருந்தவர்களில் மேலும் பதினேழுபேர் மாலை தீவுக்கு மீண்டும் திரும்பக் கூடாது என்ற நிபந்தனையுடன் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர். இன்னமும் பதினெட்டு பேர் மாலைதீவுச் சிறையிலுள்ளனர். இவர்கள் அனைவரும் புளொட் குழுவைச் சேர்ந்தவர்களாவர்.

# பொருளாதார தடையை எதிர்த்து

கொண்டிருந்தனர். ''உன் ...

சோவியத் யூனியனில் புரட்சிச் சதியில் ஈடுபட்ட வெனடியானேவ்வும் கே.ஜி.பி உளவுப் படையின் தலைவர் கிரியோக்கோவ் உட்பட ஏனைய ஆறு பேரும் மொஸ்கோவை விட்டு வெளியேறி விட்டனர்.

இவர்கள் எட்டுப் பேரும் வெளியேறியதை ரஷ்ய தலைவர் ... நாடாளுமன்ற உரையில் குறிப்பிட்டார். அதேவேளை உலுகோபா என்ற விமானநிலையத்திற்கு இவர்கள் சென்று கொண்டிருக்கின்றனர் என்று அவர் தமது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்க செய்திஸ்தாபன செய்திப்படி யானேவும், கிரியோக்கோவும் ஏற்கனவே உலுகோபா விமானத்தளத்திலிருந்து வெளியேறிவிட்டதாக அந்த விமான தளத்தின் பாதுகாப்பிற்குப் பொறுப்பானவர் குறிப்பிட்டதாக கூறியது.

படைகள் அகன்றன

இந்த புரட்சிக்குழு வெளியேறியதைத் தொடர்ந்து மொஸ்கோவின் கிரெம்ளினின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கே.ஜி.பீ. நிலை குறித்து குழப்பமான தகவல்

(மொஸ்கோ)

கடந்த திங்கட்கிழமை நடந்த சதிப்புரட்சியின் கே.ஜி.பியின் நிலை தொடர்பாக வெளியாகும் செய்திகள் குழப்பம் மிக்கவையாகவுள்ளன.

கே.ஜி.பீ. தலைவர் பிளாடிமீர் கிரிச்சேவ் சதிப்புரட்சியில் ஈடுபட்டவர்களின் குழுவில் இருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது வரும் செய்திகள் முரண்பட்டவையாகவுள்ளன. அதேவேளை கொர்பசேவ் ஆட்சி கவிழ்ப்புத் தொடர்பாக சோவியத் உளவு ஸ்தாபனமான கே.ஜி.பீ.க்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மொஸ்கோவில்

பல கே.ஜி.பீ. தலைவர்கள் ரஷ்யக் குடியரசுத் தலைவர் பொறிஸ் யெல்சினுக்கு நேரடி

(4 ஆம் பக்கம் பார்க்க)

கள் கலை, பண்பாட்டுக் கழ

## விதவைகளுக்கான ஒய்வூதிய படிவங்கள் செயலகத்தில் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

விதவைகளுக்கான ஒய்வூதியத்தைப் பெறுவதற்குரிய படிவங்களை இனிமேல் யாழ். செயலகத்திலேயே பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

பட்டு மாலைதீவில் சிறை வைக்கப்பட்டிருந்தவர்களில் மேலும் பதினேழுபேர் மாலைதீவுக்கு மீண்டும் திரும்பக் கூடாது என்ற நிபந்தனையுடன் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர். இன்னமும் பதினெட்டு பேர் மாலைதீவுச் சிறையிலுள்ளனர். இவர்கள் அனைவரும் புளொட் குழுவைச் சேர்ந்தவர்களாவர்.

# பொருளாதார தடையை எதிர்த்து வன்னியில் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

சிறிலங்கா அரசின் பொருளாதாரத்தடை மற்றும் அடக்குமுறை நடவடிக்கைகளைக் கண்டித்து வவுனியா மாவட்டத்தில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெற்றுள்ளன.

நேற்றுமுன் தினம் இரு வெவ்வேறு பகுதிகளில் நடைபெற்ற இந்த ஊர்வலங்களில் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வந்து கலந்துகொண்டனர்.

காலை 10.30 மணியளவில் இறம்பைக்குளம் என்ற இடத்தில் திரண்ட மக்கள் ஓமந்தை நோக்கி ஒரு அணியாகவும், மாலை 2 மணியளவில் பூவரசம்குளம் என்ற இடத்தில் கூடிய மக்கள் குஞ்சுக்குளம் என்ற இடத்தை நோக்கி இன்னொரு அணியாகவும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்தினர்.

ஊர்வலத்தில் பங்குபற்றிய மக்கள் சிறிலங்கா அரசிற்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறும், பதாகைகளைத் தாங்கியவாறும் சென்று கொண்டிருந்தனர். ''உன் இனவாதக் கொள்கையைக் கைவிடு, எங்களைச் சுதந்திரமாக வாழவிடு'', ''நாங்கள் தன்மானம் உள்ளவர்கள் எங்களை அடிமைகளாக நடாத்தாதே'', ''உனது கொலை வெறிக்கு எமது மாணவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ வாகனம் நசித்து 10 பொதுமக்கள் பலி

ரஷ்யக் குடியரசின் அரச கட்டடத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள தடைகளை அகற்றவிடாது தடுத்த மக்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் பத்துப் பேர் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை இராணுவத்தினர் ரஷ்யக்குடியரசின் அரச கட்டடத்தைச் சுற்றியுள்ள தடைகளைஅகற்றிக்கொண்டு

(4ஆம் பக்கம் பார்க்க)

## பொரிஸ் யெலிசினுக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும்

- ஜோர்ஜ் புஷ்

(வாஷிங்டன்)

அமெரிக்கா தொடர்ந்தும் பொரிஸ் யெலிசினுக்கு ஆதரவு வழங்கும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் கூறியுள்ளார். ரஷ்ய குடியரசு ஜனாதிபதி யெலிசினுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் மேலும், அரசியலமைப்பு ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் கொர்பசேவ் மீண்டும் பதவியில் அமர்த்த யெலிசின் எடுக்கும் முயற்சிகளுக்கு தமது நாடு பூரண ஆதரவை நல்கும் என்றும் குறிப்பிட்டார்.

## புலிகளிடம் சிக்கியவரை மீட்க முயற்சிக்கிறோம்

- டி பி விஜேதுங்கா

(கொழும்பு)

''விடுதலைப் புலிகளிடம் சிக்கியுள்ள சிறிலங்கா பாதுகாப்புப்படை வீரர் ஒருவரை மீட்க சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறோம்'' என சிறிலங்கா பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமாகிய டி. பி விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தினுள் 500 புலிகள் நுழைந்துள்ளனராம்

(சென்னை)

துப்பாக்கிப் பயிற்சி பெற்ற ஐந்நூறு புலிகள் தமிழகத்திற்குள் நுழைந்துள்ளார்கள் என்றும், அவர்களில் பலர் தீவிர போர்ப் பயிற்சி பெற்றவர்கள் என்றும் மத்திய புலனாய்வு விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ராஜீவ் காந்தி கொல்லப்படுவதற்கு பத்து நாட்களுக்கு முன்பு மே மாதம் 10 ஆந் திகதியே இந்த ஐந்நூறு புலிகளும் பல படகுகளில வேதாரணியம் கோடிக் கடற்கரையில் வந்து இறங்கினார்கள் என்றும், அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சிறிமா - அனுரா விவகாரம்; தீர்க்க நிர்வாகக் குழு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கும், இக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்காவிற்கும் இடையிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நிர்வாக குழுவொன்றினை நியமிப்பது என இக்கட்சியின் பாராளுமன்றக் குழு முடிவெடுத்துள்ளது.

கடந்த திங்கட்கிழமைகூடிய சுதந்திரக் கட்சி பாராளுமன்றக் குழு இருவருக்கும் இடையில் வளர்ந்து வரும் முரண்பாடுகள் பற்றியும் ஆராய்ந்தது.

## கிட்டு வெளியேற பிரிட்டன் விதித்த காலக்கெடு முடிவு

பிரிட்டனிலிருந்து வெளியேறுவதற்காக கிட்டு (சதாசிவம் கிருஷ்ணகுமார்) அவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த காலக்கெடு நேற்றிரவுடன் முடிவடைவதாக இந்திய வானொலி நள்ளிரவு அறிவித்தது.


# புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி 5 படை பலி; 4 பேர் காயம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட கண்ணி வெடியில் சிக்கி ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் நான்குஇராணுவத்தினர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன் தினம் அம்பாறை மாவட்டத்தில் உழவு இயந்திரம் ஒன்றில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் கண்ணி வெடியில் சிக்கிய போதேஇந்தஇழப்புகள் இடம் பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை கஜன்
### (சின்னையா சீவரத்தினம்)

அன்னையின் மடியில்: 15-01-1973

தமிழ்த் தாயின் மடியில் 14-07-1991

விடுதலைத்தொட்டிலில் விளையாடிய குழந்தை
வீரத்துணிவுடன் வீழ்ந்துவிட்டாய் செம்மண்ணில்
விலை கொடுத்து வாங்கிடுவோம் உன்னுயிரை
விதியே நீ சொல் விலை என்னவென்று?
உயிர் கொடுத்த உத்தமனே!
உனைப் பிரிந்து தவிக்கின்றோம்
வீரகாவியம் படைத்த வீர கஜனே
நீ மறைந்து விட்டாலும்
உனது நினைவலைகள் என்றென்றும்
எம் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும்
தமிழீழம் பிறக்கும் - உன்
வரலாறு நிலைக்கும்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

- குடும்பத்தினர்.

(R/1663)

---

### சீருடைத் துணிகள்
### ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் சீர் உடைத் துணிகள் 1991-08-24 அன்று காலை 10-30 மணியளவில் ஏலத்தில் விற்கப் படும்.

1. வெள்ளை பொலியஸ்டர் 'சீனரக' சேட் துணி - 800 மீற்றர்
2. வெள்ளை பொலியஸ்டர் காற்சட்டைத் துணி - 500 மீற்றர்

ஏலத்தில் வெற்றி பெறுபவர் பொருள்களுக்கான முழுப்பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அப்பொருள்கள் அனைத்தையும் அன்று மாலை 4-00 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்தல் வேண்டும். துணிகளைப் பார்வையிட விரும்புபவர்கள் யாழ். பல்கலைக்கழக நிதிப்பிரிவில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

- பதிவாளர்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

(B-2975)

---

### வருடாந்த மஹோற்சவம்

மாரீசன்கூடல் முருகமூர்த்தி கோயில் வருடாந்த மஹோற்சவம்
14-8-91 புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 24-8-91 சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் திருவருள் பாலித்து உற்சவம் பூர்த்தியாகும்.

(R/1660)

---

### வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் கல்வியாண்டு 1991/92

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டப்படிப்பு நெறிக்கான
கலைமாணி B.A
வணிகமாணி (B.Com)
விஞ்ஞானமாணி (B,Sc)
ஆகிய பட்டத்திற்கு

A/L இல் 3 பாடங்களில் சித்தி அடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

விபரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் தபால் மூலமும் நேரிலும் பெற்றுக் கொள்ளவும். முடிவுத்திகதி: 10.09.1991

இதற்கான விரிவுரைகள் ஆரம்பம்: 14.09.1991

விபரங்களுக்கு:

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(B/2982)

---

### நினைவு கூருகின்றோம்...

## 1991 - 08 - 22

1989 ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டக்களப்பு, வட்டுமடுப் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

ரவி (பொன்னையா விஜயராஜ் - தம்பிலுவில், அம்பாறை)

மேன்காமத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

கப்டன் நடேஷ் (இ. திலகரத்தினம் - தம்பலகாமம், திருக்கோணமலை)

விடுதலைத்தொட்டிலில் விளையாடிய குழந்தை
வீரத்துணிவுடன் வீழ்ந்துவிட்டாய் செம்மண்ணில்
விலை கொடுத்து வாங்கிடுவோம் உன்னுயிரை
விதியே நீ சொல் விலை என்னவென்று?
உயிர் கொடுத்த உத்தமனே!
உனைப் பிரிந்து தவிக்கின்றோம்
வீரகாவியம் படைத்த வீர கஜனே
நீ மறைந்து விட்டாலும்
உனது நினைவலைகள் என்றென்றும்
எம் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும்
தமிழீழம் பிறக்கும் - உன்
வரலாறு நிலைக்கும்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

- குடும்பத்தினர்.

(R/1663)

## வருடாந்த மஹோற்சவம்

மாரீசன்கூடல் முருகமூர்த்தி கோயில் வருடாந்த மஹோற்சவம்
14-8-91 புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 24-8-91 சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் திருவருள் பாலித்து உற்சவம்

பூர்த்தியாகும்.

(R/1660)

# A/L 92 புதிய பிரிவுகள்

## சனி - ஞாயிறு வகுப்புகள்

தாவரவியல்:
திரு. ஐங்கரநேசன்

விலங்கியல்:
திரு. நாகநாதன்

இரசாயனவியல்:
திரு செல்வா

பௌதிகவியல்:
திரு .வர்ஷன்

தூய / பிரயோக கணிதம்:
திரு. சந்திரமோகன்

| நேரம் | பாடம் | அலகு |
|---|---|---|
| காலை | | |
| 6.00 - 7 00 | தாவரவியல் | உடற்றொழிலியல் |
| 7.00 - 8 00 | தாவரவியல் | புதிய உடல் அமைப்பும் இனப்பெருக்கமும் |
| பிற்பகல் | | |
| 2-30 - 3.30 | பௌதிகவியல் | மின்னியல் |
| 3.30 - 4.30 | இரசாயனவியல் | அசேதன இரசாயனம் |
| 4.30 - 5.30 | தாவரவியல் | உடலமைப்பியல் |
| | பிரயோககணிதம் | |
| 5 30 6.30 | விலங்கியல் | மூளையவியல் |
| | தூயகணிதம் | |

★ குறித்த எண்ணிக்கையானவர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படுமாதலால் 23 - 08 - 91 இற்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

அரம்பம: 25 - 08 - 91 (ஞாயிறு)

**யூனிவேர்சல்** கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(B/2974)

## ENGLISH (ஆங்கிலம்)

SPOKEN ENGLISH WITH GRAMMER AND LITERATURE 6 மாத விசேட ஆங்கிலப் பயிற்சி 25 8.91இல் ஆரம்பிக்கவுள்ளது. விபரங்களுக்கு: V.N KANDASAMY, A. I B. PART 1 (London) INTER (London), STATION ROAD, KOKUVIL.

(R-1655)

## O/L 90, 91 வாராந்த பயிற்சி மதிப்பீடு

விஞ்ஞானம், கணிதம், ஆகிய பாடங்களுக்குரிய பகுதி I+II வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும், அதற்கு விடையளித்துத் தரும் பட்சத்தில் இலவசமாக விடையுடன் திருத்திக் கொடுக்கப்படும். BOND புத்தக நிறுவனம் 58A, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

(B-2980)

## ஆண்டு - 5 (புலமைப்பரிசில்)

(மாணவர்களைப் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமான பயிற்சிப் பரீட்சை) தமிழ், கணிதம் பாடங்களுக்குரிய மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். அவற்றிற்கு விடையளித்துத் தரும் பட்சத்தில் இலவசமாக விடைகளுடன் திருத்திக் கொடுக்கப்படும். BOND புத்தகநிறுவனம், 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(B-2987)

# கூறுகின்றோம்...

## 1991 - 08 - 22

1989 ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டக்களப்பு, வட்டுமடுப் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

ரவி (பொன்னையா விஜயராஜ் - தம்பிலுவில், அம்பாறை)

மேன்காமத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

கப்டன் நடேஷ் (இ. திலகரத்தினம் - தம்பலகாமம், திருக்கோணமலை)

மீசைராஜா (குழந்தைவேல் ராஜா - கிளிவெட்டி, திருக்கோணமலை)

1990 ஆம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

சசியன் (ஜோன் அந்தோனிப்பிள்ளை-குமிழமுனை)

ஊர்காவற்றுறையில் உலங்கு வானூர்திகள் மூலம் தரையிறக்கப்பட்ட சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

லெப். காந்தன் (சின்னத்துரை சிவலிங்கம் - 1 ஆம் வட்டாரம், புங்குடுதீவு)

நிசாந்தன் (சுப்பிரமணியம் மாணிக்கம் - 3 ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு)

பாபுஜி (ஜயாத்துரை அருட்செல்வன் - சந்தை வீதி, காங்கேசன்துறை)

காங்கேசன்துறை முகாமிலிருந்து வெளியேற முயன்ற சிறிலங்காப் படையினருடன் மாவிட்டபுரத்தில் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

சேனாஜி (செல்லக்கண்டு ஜெயச்சந்திரன் - சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி)

கவுணியாவிலிருந்து வந்து கொண்டிருந்த வாகனத்தின் மீது இயக்கச்சியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்

பூநகரி, சங்குப்பிட்டி, கேரதீவுப் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட இளைஞர்கள் உட்பட 13 தமிழர்கள்

காரைநகரில் தரையிறக்கப்பட்ட சிறிலங்காப் படையினர் பருத்தியடைப்பு, பாலாவோடை, சாரதிபுரம் பகுதிகளில் மேற்கொண்ட அட்டூழியங்களின் போது படுகொலை செய்யப்பட்ட மற்றும் அரைகுறையாக எரிந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி, அவரது பேரன், பேர்த்தி ஆகியோர் உட்பட பல தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/2978)

## சிந்தனைக்கு

முந்திய தலைமுறையினர் செய்ததையே மீண்டும் செய்து கொண்டிருப்பவரல்லாது, புதியவற்றைச் செய்யும் ஆற்றல் மிக்கவரை, படைப்பாற்றல், புதுமை ஆர்வம், கண்டு பிடிப்பு ஆற்றல் உடைய மனிதரை உருவாக்குவதே கல்வியின் தலையாய குறிக்கோள்.

— ஜீன்பியாகே

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 22-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5208
தி. பெ. எண் 05

# யாழ். பல்கலையில் வெளிவாரி பட்டப்படிப்பு

யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப் படிப்பை தொடங்குவதற்கு பல்கலைக்கழக மானியக்குழு அனுமதித்துள்ளது. யாழ். பல்கலைக்கழகமும் அந்த விவகாரத்தில் விரைவாகச் செயற்பட்டு 1990 / 1991 ஆண்டிற்கான வர்த்தக முதற் தேர்வு, கலை முதல்தேர்வு என்பனவற்றிற்கு பதிவு செய்யுமாறு மாணவர்களைக் கோரியுள்ளது.

இதன் மூலம் பல்கலைக்கழக அனுமதி இடைக்காத மாணவர்களும், வசதி இல்லாமையால் பல்கலைக்கழக படிப்பைத் தொடர முடியாதவர்களும், ஏனைய தொழில் துறையைச் சார்ந்த உயர்கல்வி பெற விருப்பமுள்ளவர்களும் பட்டப்படிப்பை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன. ஆகையினால் இதுவரையிலும் ஏதோ ஒரு வகையில் உயர்கல்வி மறுக்கப்பட்டவர்களுக்கு ஓரளவு உதவக் கூடியதாக யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படும் வெளிவாரிப் பட்டப்படிப்பு திட்டம் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இருபதிருந்தும் கடந்த காலத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு உயர் கல்வி இடைக்கவில்லை. அதுவும் பல்கலைக்கழகத் தரப்படுத்தல் முறை அமுல் படுத்தப்பட்டமை மேலும் நிலைமையை மோசமாக்கியது. பெரும்பாலான மாணவர்களுக்கு கல்விகற்கும் உரிமை மறுக்கப்பட்டது என்றே சொல்லலாம்.

அதேவேளை கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்களில் வெளிவாரிப் பட்டப்படிப்பிற்குரிய வசதிகள் இருப்பினும் தமிழ் மாணவர்களைப் பொறுத்து பெரிதும் அது செலவீடானதும், வசதியற்றதாகவும் இருந்தது.

### ஆனையிறவுப் போர் மூலம்

# பெண் போராளிகளின்வீரம் உலகுக்கு உணர்த்தப்பட்டது

-ஆர்த்தி

இன்று உலகமெங்கும் பெண்கள் விடுதலை பெற வேண்டும் என்ற முழக்கம் வலுப்பெற்று இருந்தாலும் பெண்களுக்கான சமூக அடக்கு முறையை உடைத்தெறிவதற்கான செயல் வடிவில் துணிந்து இறங்கி உலக நாடுகளின் பார்வையை எமது பக்கம் ஈர்த்துக் கொண்டிருப்பவர்கள் எமது பெண் போராளிகள். இதுவரை காலமும் நிகழ்ந்த சண்டையிலே பெண்களின் பங்களிப்பு பெரும்பான்மையாக இருந்தாலும் பெரியதொரு பிரச்சார வடிவம் பெறாமல் இலைமறை காயாகவே இருந்தது ஆனால் இன்று ஆனையிறவு யுத்தக் களத்திலே களமாடி வீரமரணம்அடைந்த, காயமடைந்த, தொடர்ந்தும் தாக்குதலுக்கு தயார் நிலையில் உள்ள எமது பெண் போராளிகளின் வீரம் உலக அரங்கின் கவனத்தை முழுமையாக ஈர்த்துள்ளது. பெண்கள் சமூக அடக்குமுறையில் இருந்து விடுபடுதல் என்ற வகையில் உலகப் பெண்களுக்கு ஒரு முன் உதாரணமாக திகழப்போகின்றவர்கள். எமது தமிழீழப் பெண்கள் தான் என்பதை எம்மால் இப்பொழுதே உணரமுடிகின்றது.

இவ்வாறு புங்குடுதீவில் நடைபெற்ற போர்க் காலக் கருத்தரங்கில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மகளிர் படைப்பிரிவு யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் ஆர்த்தி தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்:

ஒரு காலத்தில் பெண்கள் மென்மையானவர்கள். அவர்களால்கடினவேலைகள்செய்ய இயலாது என்ற மனப்பான்மையும் இவர்களுக்கு கல்வி தேவை இல்லை என்ற சிந்தனையும் மக்கள் அனைவரிடமும் ஊறிக்கிடந்தது. இன்று காலத்தின் தேவைகாரணமாக பெண்களுக்கான கல்வியும் வேலை வாய்ப்பும் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருந்தாலும் இவர்கள் மென்மையானவர்கள் என்ற கருத்து இன்னும் நிலவுகின்றது. அந்த சிந்தனையை தகர்த்து சமூக விடுதலையைப் பெற வேண்டுமானால் எமது இன அடக்குமுறை ஒடுக்கப்பட்டு சுதந்திர தாயகம் பெறப்பட வேண்டும் என்ற சிந்தனையை செயல் வடிவம் ஆக்கினார்கள் எமது பெண் போராளிகள்.

சிங்கள ஆக்கிரமிப்பு அரசாங்கம் எமது மண்ணை ஆக்கிரமிப்பதற்காகப் பெருந்தொகையான சிங்கள இளைஞர்களை யுவதிகளை அணிதிரட்டிக்கொண்டு இருக்கும் போது எம்மண்ணிலே எவ்வளவு காலம் தான் நாம் அகதிகளாக ஓடிக்கொண்டு இருப்பது? இன்று ஆண் பெண் வயது பேதங்கள் இன்றி நாம் அனைவரும் ஆயுதம் ஏந்த வேண்டிய காலத்தின் தேவை ஒன்று எழுந்துள்ளது.

800000 மக்கள் வாழ்கின்ற இந்த யாழ். குடா நாட்டில் இருந்து குறைந்தது 50000 பேர் ஆயுதம்ஏந்தினால் நாம் இந்த மரபுவழி யுத்தத்தில் விரைந்து வெற்றியைப் பெற முடியும். எமது எல்லைகளை மீட்டு எடுக்கமுடியும். சோழர் காலத்தின் பின் இன்று தான் தமிழர்களுக்கு மீண்டும் ஒரு பொற்காலம் பிறந்துள்ளது. இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது. எமக்குக் கிடைக்கின்ற பெருமதி மிக்க காலத்தை உருவாக்கிய தலைவரின் கீழ் எமது விடுதலையைவென்றெடுப்பதற்காக மரணவாயிலில் போராடும் எமது மழலைகளின் கரங்களை வலுப்படுத்த அனைவரும் அணிதிரளவேண்டும். (22)

## முகாமிற்கு வெளியில் உள்ளோருக்கு

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடத்தும்

# மாவீரர் தினப் போட்டிகள்

21-11-91 தொடக்கம் 27-11-91 வரையில் நடைபெற இருக்கும் மாவீரர் தினத்தை ஒட்டி நடாத்தப்பட இருக்கும் கலைகலாசாரப் போட்டிகளில் எழுத்தாளர்கள் கலைஞர்கள் மற்றும் இத்துறையில் ஆர்வம் மிக்கோர் மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இப்போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெற உள்ளன.

1. கட்டுரை 2. நாவல் 3. சிறுகதை
4. கவிதை 5. சுவரொட்டி

இவற்றை ஆக்க விரும்புவோர் ஆக்கங்களை 25-10-91 க்கு முன்பு எமது பிரதேச மாவட்ட காரியாலயங்களிலும் அல்லது பத்திரிகைக் காரியாலயங்களில் ஒப்படைக்கும்படி வேண்டுகின்றோம்.

★ போட்டிகள் அனைத்தும் மாணவர்களுக்கு வேறாகவும் மற்றையோருக்கு வேறாகவும் இரு பிரிவுகளாக நடைபெறும்.

★ தமிழீழத்தின் அதியுயர் கௌரவமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ள இப்போட்டிகளில் ஆர்வம் ஆற்றல்மிக்க அனைவரும் கலந்து கொள்ளலாம்.

### போட்டிகளுக்கான விதிமுறைகள்

தமிழீழ மக்கள் அனைவரும் கலந்து கொள்ளக் கூடிய இப்போட்டிகளில் படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப்போரை அடிப்படையாகக் கொண்டும் அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும் சமகாலத்தில் எமது மக்களின் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட யதார்த்த தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண் மீட்புப் போரில் இன்னுயிர் ஈந்த மாவீரர்களின் உணர்வுகளையும் இதயதாகத்தையும் பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதே போல் சுவரொட்டிகளின் கருப்பொருள்கள் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் நன்று. இலக்கியப் படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்படவேண்டும்.

சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்குக் குறையாமலும் கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். சுவரொட்டிகள் யாவும் அட்போட்டில் 60 சென்ரி மீற்றர் X 40

படிப்பைத் தொடர முடியாதவர்களும், ஏனைய தொழில் துறையைச் சார்ந்த உயர்கல்வி பெற விருப்பமுள்ளவர்களும் பட்டப்படிப்பை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன. ஆகையினால் இதுவரையிலும் ஏதோ ஒரு வகையில் உயர்கல்வி மறுக்கப்பட்டவர்களுக்கு ஓரளவு உதவக் கூடியதாக யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படும் வெளிவாரிப் பட்டப்படிப்பு திட்டம் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

தகுதியிருந்தும் கடந்த காலத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு உயர் கல்வி இடைக்கவில்லை. அதுவும் பல்கலைக்கழகத் தரப்படுத்தல் முறை அமுல்படுத்தப்பட்டமை மேலும் நிலைமையை மோசமாக்கியது. பெரும்பாலான மாணவர்களுக்கு கல்விகற்கும் உரிமை மறுக்கப்பட்டது என்றே சொல்லலாம்.

அதேவேளை கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்களில் வெளிவாரிப் பட்டப்படிப்பிற்குரிய வசதிகள் இருப்பினும் தமிழ் மாணவர்களைப் பொறுத்து பெரிதும் அது செலவீடானதும், வசதியற்றதாகவும் இருந்தது. பரீட்சைக்காகவோ அன்றி வேறு தேவைகளுக்காகவோ பல்கலைக்கழகம் செல்லுதல், தங்குமிட வசதிகள் என்பன சிரமமானதாக இருந்து வந்தன. இதன் காரணமாக பரீட்சைப் பெறுபேறுகளும் பெரிய அளவில் சிறப்பானதாக அமையவில்லை என்பதை கடந்தகால பெறுபேறுகளில் இருந்து அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

மேலும், பல்கலைக்கழகங்கள் தொலைவில் இருந்தமையால் சில தனியார் கல்வி நிறுவனங்கள் வெளிவாரிப்பட்டப்படிப்பைத் தமது ஏகபோக உரிமையாக எடுத்துக் கொண்டன. இதன் மூலம் மாணவர்கள் மீது சில அழுத்தங்களையும், கட்டுப்பாடுகளையும், சில சுமைகளையும் அவை ஏற்படுத்தின.

இந்தநிலையில், யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப்பட்டப்படிப்பு ஆரம்பிக்கப்படுவது மாணவர்களைப் பொறுத்து பெரிதும்நன்மை அளிக்கும் விடயம் என்பதில் ஐயமில்லை. அதற்குத் தொடர்ச்சியாக முயற்சித்து முன்னின்றுழைத்த யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே.

அதேவேளை வெளிவாரிப் பட்டப்படிப்பு தொடர்பான சில விடயத்தில் யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் தொடர்ந்தும் கவனம் செலுத்துதல் வேண்டும். வெளிவாரிப்பட்டப்படிப்பிற்கு பல்கலைக்கழகத்தில் விரிவுரைகள் இல்லாமையினால், வெளியில் தனியார் கல்வி நிறுவனங்கள் வளர்வதைத் தடுப்பது சிரமமானதாகும். இந்தத் தனியார் கல்வி நிறுவனங்களில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விரிவுரைகளை நடத்துவது சில அவப்பெயர்களைப் பல்கலைக்கழகத்திற்குத் தோற்றுவிக்கும், அதாவது தனியார் நிறுவனங்கள் தமது நலனுக்காகவும், இலாபத்திற்காகவும் விரிவுரையாளர்களின் பெயர்களைப் பயன்படுத்தக் கூடும். இதன் காரணமாக இந்த விடயத்தில் பல்கலைக்கழக நிர்வாகம் கவனம் எடுத்தல் வேண்டும்.

அத்தோடு தற்பொழுது எமது மண்ணில் இடம் பெற்று வரும் போராட்டச் சூழலைக் கருத்திற் கொண்டதாக எமது மண்ணினதும் மக்களினதும் தேவைகளைப் புரிந்து கொள்ளக் கூடியதான பாடவிதானங்களைச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். இவை இரண்டும் பல்கலைக்கழகத்தின் நற்பெயருக்கும் சமுதாயத்தின் ஆரோக்கிய வளர்ச்சிக்கும் அவசியமானதாகும்.

---

இவ்வாறு புதுக்குடியிருப்பில் நடைபெற்ற போர்க் காலக் கருத்தரங்கில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மகளீர் படைப்பிரிவு யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் ஆர்த்தி தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்:

ஒரு காலத்தில் பெண்கள் மென்மையானவர்கள். அவர்களால்கடினவேலைகள்செய்ய இயலாது என்ற மனப்பான்மையும் இவர்களுக்கு கல்வி தேவை இல்லை என்ற சிந்தனையும் மக்கள் அனைவரிடமும் ஊறிக்கிடந்தது. இன்று காலத்தின் தேவைகாரணமாக பெண்களுக்கான கல்வியும் போர் ஆயுதம்ஏந்தினால் நாம் இந்த மரபுவழி யுத்தத்தில் விரைந்து வெற்றியைப் பெற முடியும். எமது எல்லைகளை மீட்டு எடுக்கமுடியும். சோழர் காலத்தின் பின் இன்று தான் தமிழர்களுக்கு மீண்டும் ஒரு பொற்காலம் பிறந்துள்ளது. இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது. எமக்குக் கிடைக்கின்ற பெருமதி மிக்க காலத்தை உருவாக்கிய தலைவனின் கீழ் எமது விடுதலையைவென்றெடுப்பதற்காக மரணவாயிலில் போராடும் எமது மழலைகளின் கரங்களை வலுப்படுத்த அனைவரும் அணிதிரளவேண்டும். (22,

---

## முகாமிற்கு வெளியில் உள்ளோருக்கு

# நிவாரணம் இல்லையேல் எமக்கும் வேண்டாம்

(காரைதீவு)

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு எங்களைப் போல் இடம்பெயர்ந்து வந்த அகதிகள் எல்லோருக்கும் உலர் உணவு நிவாரணம் வழங்காவிட்டால் எங்களுக்கும் வேண்டாமென கல்லடிவிபுலானந்தா மகாவித்தியாலய அகதி முகாமில் தங்கியுள்ள அகதிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

வடக்குக் கிழக்கு யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படல் வேண்டும். இது சாத்தியமின்றேல் எங்களுக்கும் தேவைப்படாது எனக்கூறி தமதுபெயர்களை அகதி முகாம் பட்டியலில் பதிவு செய்ய மறுத்து இம்மாதம் 31ஆம் திகதி விட்டனர்.

இதனால் முகாமிலுள்ளோரின் பெயர்களைப் பதியவந்த காரைதீவு உதவி அரசாங்க அதிபர் திரும்பிச் சென்றுவிட்டார். தகவலறிந்து ஸ்தலத்திற்கு வந்த அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்கும் ஒரே குரலில் அகதிகள் பெயர் விபரங்களைப் பதிய மறுப்புத் தெரிவித்தனர்.

அதிகாரிகளைச் சூழ்ந்து கொண்ட அகதிகள் தங்களை விட மிகவும் பாதிக்கப்பட்டவர் பல்வேறு இடங்களிலும் தங்கியுள்ளனர். அவர்களின் பெயர்களையும்பதியவும் இன்றேல் எங்கள் பெயர்களையும் பதிய வேண்டாம் எனக்கூறி திருப்பி அனுப்பிவிட்டனர்.

---

# ஆங்கில ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மாவட்ட ஆசிரிய சேவைத் திட்டத்தின் கீழ் ஆங்கில ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை இம்மாதம் 31 ஆம் திகதி நடைபெறும் என்று பரீட்சை ஆணையாளர் ஆதர்வெத முல்ல அறிவித்துள்ளார்.

இதற்கான நேர அட்டவணைகளும் அனுமதி அட்டைகளும் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் யாழ். மாவட்ட விண்ணப்ப தாரிகளுக்கு மேற்படி பரீட்சை தொடர்பான எத்தகைய தகவல்களும் இது வரை வழங்கப்படவில்லை.

கடந்த வாரம் யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் பரீட்சை ஆணையாளரிடம் இப்பரீட்சை தொடர்பான பணிப்புரைகளை தரும்படி கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

---

விடுதலைப்போரை அடிப்படையாகக் கொண்டும் அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும் சமகாலத்தில் எமது மக்களின் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட யதார்த்த தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண் மீட்புப் போரில் இன்னுயிர் ஈந்த மாவீரர்களின் உணர்வுகளையும் இதயதாகத்தையும் பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதே போல் சுவரொட்டிகளின் கருப்பொருள்கள் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் நன்று. இலக்கியப் படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்படவேண்டும்.

சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்குக் குறையாமலும் கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். சுவரொட்டிகள் யாவும் ஆட்போட்டில் 60 சென்ரிமீற்றர் X 40 சென்ரி மீற்றர் அளவு கொண்டதாக வண்ணப்படங்களாகவோ (எந்த வண்ணமும் உபயோகிக்கலாம்.) கறுப்பு வெள்ளைப் படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்.

போட்டியில் பங்குபற்றும் மாணவர்களது படைப்புக்கள் அவர்களது பாடசாலை அதிபர்களால் அல்லது வகுப்பு ஆசிரியர்களால் அவர்களுடைய சொந்தப் படைப்பு என உறுதிப்படுத்தப்பட வேண்டும். போட்டிக்கான கட்டுரைகள் 3000 – 5000 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் நன்று. போட்டிகளின் தீர்ப்பு தகுதி வாய்ந்த நடுவர் குழுவினால் எடுக்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

**மாணவர்களே!**
**போட்டிகள் பற்றிய சிறப்பு விதிகள்**

மாணவர்களுக்கான போட்டிகள் சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் ஆகிய விடயங்களில் நடைபெறும். இவை மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டதாக இருக்கும். ஓவியங்கள் 18X12 அளவு கொண்டதாக இருக்க வேண்டும் கட்டுரைகள் கீழ் வரும் அம்சங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

1. விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்
2. தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி
3. தமிழீழ மாணவர்களது கல்வியின் எதிர்காலம்
4. இன்றைய சூழ்நிலையில் மாணவர்களது சமூகப் பணிகள்
5. போராடுவதற்காகக் கற்போம்

மேற்கண்ட தலைப்புக்களில் கட்டுரைகள் 2,500 சொற்களுக்கு மேற்படாமல் வரைய வேண்டும். மாணவர்களுக்கான போட்டிகள் யாவும் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவு ஆகிய பிரிவுகளாக நடைபெறும்.

1. 15 வயதுக்கு உட்பட்டோர் கீழ்ப் பிரிவு
2. 15—17வயதுக்கு இடைப்பட்டோர் மத்திய பிரிவு
3. 17வயதுக்கு மேற்பட்டோர் மேற் பிரிவு

**ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்**

## சைவசமயப் போட்டிப் பரீட்சை

நல்லூர்கந்தசுவாமிகோயில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபையால் மாணவர்களிடையே சைவசமயப் போட்டிப் பரீட்சை, பண்ணிசைப் போட்டி, பேச்சுப்போட்டி ஆகிய போட்டிகள் நடாத்தப் படவுள்ளன.

இப்போட்டிகளுக்கான நிபந்தனைகளையும் அனுமதிப்பத்திரங்களையும் நல்லூர் கந்தசுவாமி கோயில் மேற்கு வீதியிலமைந்துள்ள மாநகராட்சி மன்ற சுகாதார அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாமென மாநகரசபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## கதாப்பிரசங்கம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவமகா சபையின் ஆதரவில் மேற்கு வீதி பிள்ளையார் கோயில் மண்டபத்தில் தினமும் மாலை 5-15 மணியிலிருந்து பிரம்ம ஸ்ரீ வை. நித்தியானந்தசர்மா வினால் சம்பூர்ண இராமாயண தொடர் நிகழ்த்தப்பட்டுவருகிறது.

## மயங்கிவீழ்ந்தவர் மரணம்

(வேலணை)

ஊர்காவற்றுறை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் நிவாரணப் பொருள்களை பெற்றுக்கொள்வதற்காகநேற்றுகாலை யாழ்ப்பாணத்தில் இருந்துபண்ணை வீதிவழியாக சென்ற ஒருவர் திடீரெனஏற்பட்ட மயக்கத்தினால் அந்த இடத்தில் விழுந்து மரணமானார்.

இறந்த நபர் ஊர்காவற்றுறையில் உள்ள பிரபலபாடசாலைகளில் ஒன்றான புனித அந்தோனியார் கல்லூரியில் சேவகராகக் கடமையாற்றி வந்தவரென்றும் ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற இராணுவநடவடிக்கைகளால்இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தவர் என்றும் கூறப் படுகின்றது. (14)

புலிகளிடம்

உறுப்பினர் நிமல் சிறிபால ட இல்வா எழுப்பிய கேள்வி

ரஷ்யக் குடியரசில் உள்ள சோவியத்

# ஆயுதப் படைகளின் அதிகாரத்தை ஏற்றதாக யெல்சின் அறிவிப்பு

(மொஸ்கோ)

ரஷ்யக் குடியரசில் உள்ள அனைத்து சோவியத் ஆயுதப் படைகளின் அதிகாரத்தைத் தான் எடுத்துக் கொண்டதாகக் இக் குடியரசின் தலைவர் பொரிஸ் யெல்சின் அறிவித்துள்ளார்.

அரசியல் சாசன ரீதியிலான அமைப்புக்கள் மற்றும் அரசாங்க அதிகார அமைப்புக்களின் நடவடிக்கைகள் அனைத்தும். முழு அளவிற்கு மீண்டும் நிலைநாட்டப்படும்வரை இக்குடியரசின் சகல பொறுப்புக்களும் தன்னுடையது என்றும்;

உயர் இராணுவத் தளபதிக்குரிய அதிகாரப் பொறுப்பை நேற்றுமுன் தினம் முதல் தம் வசம்எடுத்துக்கொண்டுவிட்டதாகவும் பொரிஸ்யெல்சின் அறிவித்துள்ளார்.

அத்துடன் இக்குடியரசின் வெளியுறவுத் துறை அமைச்சர் அந்திரே கொதிரே அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சுடன் ஆலோசனை கலக்க நேற்று வாஷிங்டன் சென்றுள்ளார் என ரஷ்ய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளை சோவியத்தின் தற்காலிக ஜனாதிபதி யெனடி ஜெனயாவ் வெளியிட்ட நடைமுறைகள் செல்லுபடியாகாது என்று அறிவித்துள்ளார்.

அவை சோவியத்தின் அரசியல் சாசனத்திற்கும் சட்டங்களுக்கும் முரணானவை என்பதால் இது செல்லுபடியற்றது என்றும்;

அவசரகால நிர்வாகக் குழுவின் உத்தரவுகளை பின்பற்றுமாறு ரஷ்ய குடியரசின் அதிகாரிகளையும் மக்களையும் யெனடி யெனயாவ் கேட்டுள்ளார்.

சோவியத் இராணுவம்

## இரத்த வெள்ளத்தில் நீராட விரும்பாது

(மொஸ்கோ)

சோவியத் இராணுவம் மக்களின் இரத்தத்தில் நீராட விரும்ப மாட்டாது என்று ரஷ்ய குடியரசின் ஜனாதிபதி கூட்டமொன்றில் உரையாற்றும்போது குறிப்பிட்டு உள்ளார். அவர் மேலும் பேசுகையில் ரஷ்யாவின்மீது கருமேகங்கள் சூழ்ந்துள்ளன. ஆனால் அவை நீண்டகாலம் நீடிக்கமாட்டாது மக்களின் துயரமும் நீடிக்க மாட்டாது அவர்கள் மீண்டும் சுதந்திரம் பெற்று விடுவார்கள். இந்த இக்கட்டான நேரத்தில் படைவீரர்கள் சரியான முடிவை எடுப்பார்கள் எனத் தான் நம்புவதாகவும் கூறினார்.

காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு எதிராக

## அ.தி.மு.க உறுப்பினர்கள் லோக் சபாவில் ஆர்ப்பாட்டம்

(டில்லி)

அண்ணாதிராவிடமுன்னேற்றக் கழக அரசு பதவி நீக்கம் செய்யவேண்டுமென்று இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அ. தி. மு. க. பாராளுமன்ற உறுப்பினர்கள் லோக் சபாவில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கடந்த திங் கட் கிழமை லோக்சபாவில்இந்திராகாங்கிரஸ்உறுப்பினர்கள் சிலர் சென்னையில் மத்திய அமைச்சர் ப. சிதம்பரமும்,பாராளுமன்ற சபை மத்தியில் வந்திருந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதனால்சபைக்கூட்டத்தை இருபது நிமிட நேரம் அவைத் தலைவர் சிவராஜ் பாட்டில் ஒத்தி வைத்தார்.

இதே நேரம் சபை முதல்வர் அர்ஜுன்சிங் 'அ.தி.மு.க வும், இந்திரா காங்கிரசும் நண்பர்கள் என்றும், அ.தி. மு. க அரசு கலைக்கப்படும் என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்றும், ஆத்திரத்தில் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் இவ்வாறு கேட்டுக்

## கையூம்கொழும்பு வருகிறார்

(மாலே)

மாலைதீவு ஜனாதிபதி மாமூன் அப்துல் கையூம் 'சார்க் அமைப்பின் தலைவரென்ற வகையில் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று கொழும்பு வரவுள்ளார். அவருடன் அவரது பாரியாரும், உயர்மட்ட உத்தியோக பூர்வ தூதுக் குழுவொன்றும்வருகை தரவுள்ளது

இவ் விஜயத்தின் போது சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சாரணர்கூட்டம்

ராஜீவ் கொலை வழக்கில்

## மத்திய புலனாய்வுக் குழு பணி தொடரும்

- சவான்

(டில்லி)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பிரதான சந்தேக நபர்களாகக் கருதப்பட்டு தேடப்பட்டு வந்த சிவராஜன் சுபா உட்பட ஏழு பேர் தற்கொலை செய்து கொண்ட போதிலும் மத்திய விசேட புலனாய்வுக் குழுவின் பணிகள் தொடரும். இவ்வாறு மத்திய உள்துறை அமைச்சர் எஸ் பி. சவான் நேற்று இந்திய லோக்சபாவில் கூறியுள்ளார். நேற்று முன்தினம் பெங்களூரில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி சபையில் விளக்கிக் கூறியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். செயலகத்தில்

## கொதிக்கும் வெய்யிலில் வாடும் மக்கள்

பிறப்பு மற்றும் மரண அத்தாட்சிப் பத்திரங்களுக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ். செயலகத்திலுள்ள பதிவாளர் அலுவலகக்கருமபீடத்தில் கையளிப்பவர்கள்கொதிக்கும் வெய்யிலில் நின்றவாறே உரிய ஊழியர்களிடம் நாளாந்தம் கையளித்துப் பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்த நிகழ்ச்சியை நாளாந்தம் கவனிக்கும் செயலக ஊழியர்கள் பலரும் செயலக வளாகத்தினுள் மக்கள் நிழலில் நின்று படிவங்களை ஒப்படைக்கப் பல இடங்கள் இருக்க ஏன் உயர் அதிகாரிகள் இது பற்றி அசட்டையாக இருந்து மக்களை வெய்யிலில் வைத்து தினமும் வாட்டிவதைக்கிறார்கள் எனப்பேசிக்கொள்கிறார்கள்.

இதேவேளை பொதுமக்கள் வெய்யிலில் வரிசையாகக் காத்துநிற்க, திறைசேரி ஊழியர்கள் சிலர் பின் கதவால் உள் நுழைந்து தமக்கு வேண்டியவர்களின் விண்ணப்பங்களைக் கையளிப்பதையும் அவதானிக்க முடிகிறது

மேலும் இரு ஊழியர்கள் மட்டுமே விண்ணப்பங்களை ஏற்கும் கருமபீடத்தில் கடமையில் ஈடுபட்டுள்ளனர். இவர்களும் சில சமயங்களில் வேலையைக் கைவிட்டு உரையாடலில் ஈடுபட்டிருப்பதையும் காணமுடிகிறது.

ஒய்வூதிய

முன்பு இப்படிவங்களைப் பெறுவதற்கு கொழும்பிற்கு விண்ணப்பிக்க வேண்டியிருந்தது. இதனால் ஏற்பட்டு வந்த காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காகவே இந்த நடவடிக்கை எனவும் தெரிவிக்கப்பட்டது (மு)

விபுலானந்த

லானந்த அடிகளின் இவ்விழா தொடர்பான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

## சங்கிலிக் கடத்தல் பிடிபட்டது

சிங்கப்பூரில் இருந்து ஐம்பது தங்கச் சங்கிலிகளை கொழும்புத் தமிழ் வாலிபர்கள் உள்ளங்கிக்குள் வைத்து கடத்தி வந்தபோது கைது செய்யப்பட்டுள்ளனர்.

6,71,350 ரூபா பெறுமதியானவை என மதிப்பிடப்பட்ட இந்த தங்கச் சங்கிலிகள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தங்கச் சங்கிலிகளைக் கடத்தி வந்த வாலிபர்களின் நடையில் வைத்தே இக் கடத்தல் பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நிவாரணப் பொருள்களை பெற்றுக்கொள்வதற்காக நேற்றுகாலை யாழ்ப்பாணத்தில் இருந்துபண்ணை வீதிவழியாக சென்ற ஒருவர் திடீரென ஏற்பட்ட மயக்கத்தினால் அந்த இடத்தில் விழுந்து மரணமானார்.

இறந்த நபர் ஊர்காவற்றுறையில் உள்ள பிரபல பாடசாலைகளில் ஒன்றான புனித அந்தோனியார் கல்லூரியில் சேவகராகக் கடமையாற்றி வந்தவரென்றும் ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற இராணுவநடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தவர் என்றும் கூறப்படுகின்றது. (14)

**புலிகளிடம்**

உறுப்பினர் நிமல் சிறிபால டி. சில்வா எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்துப் பேசிய டி. பி. விஜேதுங்கா ''நாங்கள் வீரரை விடுதலை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்கிறோமே தவிர புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை'' என்று தெரிவித்தார்.

காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு எதிராக

# அ.தி.மு.க உறுப்பினர்கள் லோக் சபாவில் ஆர்ப்பாட்டம்

(டில்லி)

அண்ணாதிராவிடமுன்னேற்றக் கழக அரசு பதவி நீக்கம் செய்யவேண்டுமென்று இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அ. தி. மு. க. பாராளுமன்ற உறுப்பினர்கள் லோக் சபாவில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கடந்த திங்கட்கிழமை லோக்சபாவில்இந்திரா காங்கிரஸ்உறுப்பினர்கள் சிலர் சென்னையில் மத்திய அமைச்சர் ப. சிதம்பரமும், பாராளுமன்ற உறுப்பினர்கள் அடைக்கலராஜ், சுந்தரராஜ் ஆகியோர் தாக்கப்பட்டதைக் கண்டித்து அ. தி. மு. க பதவி விலக வேண்டும் என கேட்டிருந்தது.

இக் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே நேற்றுமுன்தினம் அ. தி. மு. க உறுப்பினர்கள் சபை மத்தியில் வந்திருந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதனால்சபைக்கூட்டத்தை இருபது நிமிட நேரம் அவைத் தலைவர் சிவராஜ் பாட்டில் ஒத்தி வைத்தார்.

இதே நேரம் சபை முதல்வர் அர்ஜுன்சிங் 'அ.தி.மு.கவும், இந்திரா காங்கிரசும் நண்பர்கள் என்றும், அ.தி.மு.க அரசு கலைக்கப்படும் என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்றும், ஆத்திரத்தில் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் இவ்வாறு கேட்டுக் கொண்டனர்' என்று தெரிவித்த போதும் சபையின் பிற்பகல் நிகழ்ச்சிகளை அ. தி. மு. க உறுப்பினர்கள் பகிஷ்கரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**பொருளாதாரதடை**

களா பலிக்கடாக்கள்'' என்பன போன்றபல்வேறுகோஷங்களை வானம் அதிரும்படி முழக்கமிட்டவாறு மக்கள் சென்றுகொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

**இராணுவ**

கவசவாகனங்கள் மூலம் உள்ளே நுழைந்தபோது அதனை எதிர்த்த மக்கள் மீது இராணுவம் துப்பாக்கியால் சுட்டும், வாகனங்களால் இடித்தும் கலைத்தது.

இதில் துப்பாக்கிச் சூட்டுக்கு ஒருவரும், கவசவாகனம் நெரித்து ஒன்பதுபேரும் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ஒருவர் அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர் என்றும், ஆர்ப்பாட்டக்காரர்களால் ஒன்பது இராணுவ வீரர்கள் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர் என்றும் செய்தி ஒன்று கூறியது.

**கே. ஜி. பி.**

யாகவே தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். அதே வேளை கே.ஜி.பி. தலைவர் பிளாடிமிர் கிரிச்சேவ் பதவியில் தொடர்ந்தும் நீடிக்கிறார்என்றும்அவர்பதவியில் இருந்து நீக்கப்பட்டது தவறான பிரசாரம் என்றும், அவரே பாராளுமன்றத்தின் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்தினார் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

## வருகிறார்

(மாலே)

மாலைதீவு ஜனாதிபதி மாமூன் அப்துல் கையூம் 'சார்க்' அமைப்பின் தலைவரென்ற வகையில் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று கொழும்பு வரவுள்ளார். அவருடன் அவரது பாரியாரும், உயர்மட்ட உத்தியோகபூர்வ தூதுக் குழுவொன்றும்வருகை தரவுள்ளது.

இவ் விஜயத்தின் போது சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சாரணர்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சாரணத் தலைவர்கள், குழுச் சாரணத் தலைவர்கள், உதவி சாரணத் தலைவர்கள், குருளைச் சாரணர் தலைவர்கள் மற்றும் உதவி குருளைச் சாரண தலைவிகளுக்கான கூட்டம் இன்று 22ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் என்று சாரணர் சங்கச் செயலாளர் பொ. சிறிஸ்கந்தராஜா அறிவித்துள்ளார்.

**அதிபர்**

படையின் நேர்முகத் தெரிவுகள் இடம்பெற்றன. இதற்குத் தோற்றத் தவறியவர்களின் அடிப்படையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்து கலந்து கொள்ளாதோரைத் தவிர ஏனைய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாக கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

1989ஆம் ஆண்டுப் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிபர்கள் தரம் 1க்கு 1934 பேரும், அதிபர்கள் தரம் 2க்கு 1715 பேரும், அதிபர்கள் தரம் மூன்றிற்கு 1500 பேரும் நியமனம் பெற்றுள்ளனர்.

திறமை, மூப்பு அடிப்படையில் அதிபர் தரம் 1க்கு 291 பேரும், அதிபர் தரம் 2க்கு 1154 பேரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவற்றைவிட 31-12-88 அன்று தொடர்ந்தாற்போல மூன்று வருடங்கள் நிறைவேற்று அதிபர்களாகச் சேவையாற்றிய 1758 பேர் இம்மூன்று அதிபர் தரங்களுக்கும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ககா! பல இடங்கள் இருக்க ஏன் உயர் அதிகாரிகள் இது பற்றி அசட்டையாக இருந்து மக்களை வெய்யிலில் வைத்து தினமும் வாட்டிவதைக்கிறார்

**ஓய்வூதிய**

முன்பு இப்படிவங்களைப் பெறுவதற்கு கொழும்பிற்கு விண்ணப்பிக்க வேண்டியிருந்தது. இதனால் ஏற்பட்டு வந்த காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காகவே இந்த நடவடிக்கை எனவும் தெரிவிக்கப்பட்டது (மு)

**விபுலானந்த**

லானந்த அடிகளின் இவ்விழா தொடர்பான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

**சோவியத்தில்**

கட்டடத்தையும் ஏனைய நகரின் முக்கிய ஸ்தானங்களையும் காவல் காத்து நின்ற இராணுவ டாங்கி காவல் படையணி தமது நிலைகளை விட்டு அகன்று சென்றதாக டாஸ் செய்தித்தாபனம் அறிவித்தது. இதனைத் தொடர்ந்து மக்கள் பெரும் கோசம் எழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததாகவும் அச்செய்தி குறிப்பிட்டது.

**தடைகள் நீக்கம்**

புரட்சிக்குழு தனது கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டதும் போட்ட பத்திரிகைஸ்தாபனங்கள் செய்தி தொடர்பு சாதனங்களுக்கான தடைகள் உடனடியாக நீக்கப்பட்டன. இந்த தடையை நீக்குவது சம்பந்தமாக விடுக்கப்பட்ட அறிக்கையில்'முன்னாள் புரட்சிக்குழு' என்றுதாம் கலைந்து போன விடயம் சூசகமாகத் தெரிவிக்கப்பபட்டதாகவும் டாஸ்செய்திகள் கூறுகின்றன.

**யெல்சினுக்கு அதிகாரம்**

உனுகோபா விமானதளத்திற்கு ஓடிய எட்டு புரட்சி குழுவினரையும் கைதுசெய்வதற்கு சோவியத் நாடாளு மன்றம் ரஷ்ய தலைவர் பொறிஸ் யெல்சினுக்கு முழு அதிகாரத்தையும் வழங்கி உள்ளதாகவும் ஒரு செய்தி தெரிவிக்கிறது.

**புஷ் கருத்து**

தொடக்கத்தில் இருந்ததை விட இப்போது நடப்பது திருப்தி தருவதாக உள்ளது என்றாலும் சோவியத்தில் என்ன நடக்கும் என்று இப்போது எதையும் முடிவாகச் சொல்லிவிட இயலாது என்று அமெரிக்க ஜனாதிபதிஜோர்ஜ் புஷ் கூறியுள்ளார்.

**டக்ளஸ் ஹேர்ட்**

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் அவர்கள் சோவியத் புரட்சி உடைந்துவிட்டது என்றும், அதன் தலைவர்கள் மொஸ்கோவை விட்டு வெளியேறிவிட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை என்று குறிப்பிட்டுள்ளார். முன்னுக்குப்பின் முரணான செய்திகள்எமக்குக் கிடைத்த போதும்சோவியத்தில் ஜனநாயகத்திற்கு வெற்றி கிடைத்துவருகிறது என்பதில் ஐயமில்லைஎன்றார் அதேவேளை கிரிமியாவிலிருந்து மொஸ்கோ நோக்கி கொர்பசேவ் புறப்பட்டு விட்டார் என்று நேற்று நள்ளிரவு பி. பி. சி கூறியது புறப்படுவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் உடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட கொர்பசேவ் தாம் நலமே வீடு திரும்புவதாக கூறியுள்ளார்.

அதே வேளை அதிரடிப் புரட்சி நடத்திய அவசரகால ஆட்சி குழு கலைக்கப்பட்டிருப்பதாகவும், அதன் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு இருப்பதாகவும், சோவியத் பாராளுமன்ற பாதுகாப்பு செயலாளர்அறிவித்துள்ளார்.

மொஸ்கோவிலிருந்துமத்திய ஆசியப் பகுதியை நோக்கிச் சென்ற விமானமொன்றிலிருந்து அதிரடி அவசர காலக் குழு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதாக பிறிதொரு செய்தி கூறியது.

இதனிடையில் இன்று சுப்றீம் சோவியத் கூடி தற்போதைய நிலைமைகளை ஆராயும் என்று உத்தியோகபூர்வ செய்தித் தாபனமான டாஸ் அறிவித்துள்ளது.

## சங்கிலிக் கடத்தல் பிடிபட்டது

சிங்கப்பூரில் இருந்து ஐம்பது தங்கச் சங்கிலிகளை கொழும்புத் தமிழ் வாலிபர்கள் உள்ளங்கிக்குள் வைத்து கடத்தி வந்தபோது கைது செய்யப்பட்டுள்ளனர்.

6,71,350 ரூபா பெறுமதியானவை என மதிப்பிடப்பட்ட இந்த தங்கச் சங்கிலிகள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தங்கச் சங்கிலிகளைக் கடத்தி வந்த வாலிபர்களின் நடையில் வைத்தே இக் கடத்தல் பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

### திருமதி
### மண்டலேஸ்வரி சரவணமுத்து

திருமதி மண்டலேஸ்வரி சரவணமுத்து சிவபதம்அடைந்து விட்டார். இவர் புலோலியை பிறப்பிடமாகவும், வட்டுவத்தை அல்வாய் வதிரியூர்களை வதிவிடங்களாகவும் கொண்ட ம. அ. சரவணமுத்துவின் அன்பு மனைவியும் A. S பூவேந்திரன் (குடும்பத்திட்ட பணிப்பாளர்) சறோயினிதேவி அவர்களின் அன்புத்தாயாரும், திருமதி தவமணி பூவேந்திரன், K. M. சுப்பிரமணியம் (Charted Engineer) அவர்களின் அன்பு மாமியாரும், திருவாளர்கள் இராதா கிருஷ்ணன் (U.S.A) இரவீந்திரன் (U.S.A), இராம்குமார், இராதாமோகன், சிவாதவேந்திரன், கௌரி, திருமதி அனுசூயா நாககோபன், திருமதி றேனுகா நாகேஸ்வரன் (Australia) அவர்களின் அன்புப் பேர்த்தியும், ஆனந், நரேன் அவர்களின் பிரிய பாட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் சைவக்கிரியைகள் வீட்டில் நடைபெற்றபின் நேற்று (21-8-91) குடும்ப மயானமாகிய ஆலங்கட்டையில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் அறியத்தருகிறேன்.

தகவல்

ம. அ. சரவணமுத்து

''சுகவாசா''
இரும்பு மதவடி,
உடுப்பிட்டி றோட்,
வதிரி.
கரவெட்டி.

(R/1664)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.